உயர்கல்வித் (கே2) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

**<u>கடித எண். 15065/கே2/2011–1, நாள் 10.08.2011</u>**

அனுப்புநர்
முனைவர் ரா. கண்ணன், பிஎச்.டி., இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பதிவாளர்கள்,
அனைத்துப் பல்கலைக்கழகங்கள்,
(உயர்கல்வித் துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பல்கலைக்கழகங்கள்)

ஐயா/ அம்மையீர்,

பொருள் உயர்கல்வித் துறை – பல்கலைக்கழகங்கள் – உயர்கல்வித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களின் வருவாய் தொகையினை முதலீடு செய்வது – தொடர்பாக

*********

உயர்கல்வித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழக மானியக்குழு உதவித் தொகை, மத்திய அரசு உதவித் தொகை, தமிழ்நாடு அரசின் மானியம் மற்றும் உதவித் தொகை, கல்விக் கட்டணம், அறக்கட்டளைத் தொகை, பரிசுத் தொகை, நன்கொடை மற்றும் கல்லூரி இணைவு கட்டணம் வாயிலாகப் பெறப்படும் வருவாய் தொகையினை தேசிய வங்கிகளில் வைப்புத் தொகையாக வைத்து மேற்கொள்ளப்பட்டு வருவது வழக்கத்தில் உள்ளது. தேசிய வங்கிகளை விட மாநில அரசின் நிதி நிறுவனங்களான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்விசை மற்றும் அடிப்படைவசதி நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகை ஏற்படுத்தினால் கூடுதல் வட்டித் தொகை கிடைக்கும் என்று கருதப்படுகிறது. மேலும், இவை தமிழ்நாடு அரசு நிறுவனங்களாகும்.

2. எனவே, அனைத்து பல்கலைக்கழகங்களும் வங்கி சேமிப்பு கணக்கு (SB Account) அன்றாட செலவினம் தவிர்த்து ஏனைய வருவாய்களான பல்கலைக்கழக மானியக்குழு உதவித் தொகை, மத்திய அரசு உதவித் தொகை, மாநில அரசு உதவித்தொகை, கல்விக்கட்டணத் தொகை, அறக்கட்டளை தொகை, பரிசுத் தொகை, நன்கொடை வாயிலாகப் பெறப்படும் தொகை, கல்லூரி இணைவு கட்டணம் வாயிலாகப் பெறப்படும் தொகை மற்றும் தொலைதூரக் கல்விக் கட்டணம் வாயிலாகப் பெறப்படும் தொகை மற்றும் இதே போன்ற இதர தொகைகள் இருப்பின் அவற்றையும் மாநில அரசின் நிதி நிறுவனங்களான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் மற்றும்

தமிழ்நாடு மின்விசை மற்றும் அடிப்படைவசதி நிதி நிறுவனம் (Tamil Nadu Power Finance Corporation, Tamil Nadu Transport Development Corporation, TDFC etc.) போன்றவைகளில் முதலீடு செய்து பயன்பெறுமாறு அனைத்து பல்லைக்கழகப் பதிவாளர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதன்மூலம் வங்கிகளைத் தேர்ந்தெடுப்பதில் புகார்கள் எழும் நிலை தவிர்க்கப்படும்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக.